My No: CEDPL/2015/16/BBA

24.08.2018

அன்புள்ள மாணவ, மாணவிக்கு

---

**வியாபார நிர்வாகமாணி (வெளிவாரிப் பொதுப் பட்டப்படிப்பு), 2015/2016**

**வருடம்:** 01
**பருவம்:** 01
**கருத்தரங்கு:** 01

---

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் நடாத்தப்படும் மேற்படி கருத்தரங்கானது 08.09.2018 அன்றுமுதல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் (ஒலுவில்) நடைபெறும் என்பதை தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

**குறிப்பு:** ஒரு பாடத்திற்கு இரண்டு மதிப்பீட்டுப் பரீட்சைகள் நடைபெற்று மொத்தமாக 30 புள்ளிகள் வழங்கப்படும். முதலாவது கருத்தரங்கின் பின்னர் 15 புள்ளிகளுக்கான மதிப்பீட்டுப் (assignment) பரீட்சை நடைபெறும். அதேபோன்று இரண்டாவது கருத்தரங்கிற்குப் பின்னரும் 15 புள்ளிகளுக்கான மதிப்பீட்டுப் (assignment) பரீட்சை நடைபெறும். ஒவ்வொரு மாணவரும் தொடர் மதிப்பீட்டில் குறைந்தது 40% மான அதாவது மொத்தமாக 12 புள்ளிகளைப் பெற்றிருந்தால் மட்டுமே பருவகால இறுதிப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். இதன்பொருட்டு மாணவர்கள் ஒவ்வொரு பாட அலகிலும் பெற்றுக்கொண்ட மொத்த தொடர் மதிப்பீட்டுப் புள்ளிகள் பருவகால இறுதிப்பரீட்சைக்கு முன்னரே வெளியிடப்படும். ஒரு மாணவன் அல்லது மாணவி 30 மதிப்பீட்டுப் புள்ளிகளுக்கு 12 புள்ளிகள் பெறத் தவறும் பட்சத்தில் அதனை அடுத்துவரும் ஆண்டுகளில் பெற்று பருவகால இறுதிப்பரீட்சைக்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். குறித்த பாடத்தின் பருவகால இறுதிப்பரீட்சைக்கு 70 புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தமாக 100 புள்ளிகளுக்கு மதிப்பீடு வழங்கப்படும்.

எனவே, இக்கருத்தரங்கிற்கு உரிய நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் தங்களது மாணவப் பதிவுப் புத்தகத்தை (Student Record book) கொண்டுவருமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு: 067 2052801, cedpl@seu.ac.lk

உதவிப் பதிவாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழிர்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்
*பதிவாளருக்காக*